[1971 டிசம்பர் 18

கொடுப்பது இல்லை. இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அவர்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முறைப்படி இரண்டாவது மாநில ஊதியக் குழுவினர் கூறிய அத்தகைய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று பரிந்துரை செய்து இருக்கிறது. எந்தெந்தப் பதவிகளை எந்த அளவுக்கு ஆக்கலாம் என்பதை சிற்றூர் வளர்ச்சி இயக்குநர் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். அவர் அறிக்கை வந்ததற்குப்பிறகு அதற்கான முடிவுகளை அரசு ஆராய்ந்து செய்யும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, இந்த விஷயமாக திரு. முருகேச முதலியார் குழு பரிசீலனை செய்து சிபாரிசுகள் செய்தார்களே ? அவை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையின் தன்மைகள் வேறு. நிதி வளர்ச்சி எந்த அளவுக்கு செய்யப்படலாம் என்பதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். இது தனியாக ஆராய வேண்டிய ஒன்று. இதைப்பற்றிச் சில பிரச்சினைகள் அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷனிடம் விடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சோழவந்தான் பேரூராட்சி

*** 555 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சோழவந்தான் பேரூராட்சியை நகரமன்றமாக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

புராதனக் கலைகளின் வளர்ச்சி

*** 556 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் தெருக்கூத்து, பொம்மலாட்டம் போன்ற புராதன கலைகளை வளர்க்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா ?